செய்தி வெளியீடு **நாள் : 09.10.2025**

கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் வருகின்ற 11.10.2025 அன்று வண்ண மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் வருகின்ற 11.10.2025 அன்று சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி நகரில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையம் திறக்கப்படவுள்ளதால் இன்று (09.10.2025) மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் **திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள்** மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** ஆகியோர் நிகழ்ச்சி முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

வண்ண மீன்கள் உற்பத்தியாளர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற நோக்கிலும், வண்ண மீன் உற்பத்தி தொழில் சார்ந்திருக்கின்ற அன்பிற்கினிய அந்த தொழிலாளர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், வண்ண மீன்கள் உற்பத்தியில் அந்நிய பொருளாதாரத்தில் பெருமளவு தமிழகத்திற்கு, குறிப்பாக ஒன்றியத்திற்கு கிடைக்கின்ற வகையில், இந்த தொழிலை தமிழகத்தில் இரண்டாவது அதிகமாக வண்ண மீன் உற்பத்தியாளர்கள் உள்ள கொளத்தூர் பகுதியில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்**, அவருடைய கனவுத் திட்டமான இந்த திட்டத்தை வண்ண மீன்களுக்கு என்று கொளத்தூரில் வண்ண மீன் உற்பத்தியாளர்களுக்காக தனியாக ஒரு வர்த்தக மையம் அமைக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்புக்கு ஏற்ப ரூபாய் 53 கோடி செலவில், 184 வண்ண மீன் உற்பத்தியாளர்களுக்கான கடைகள் அமைக்கப்பட்ட வடிவமைப்புடன், சுமார் 4 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த வர்த்தக மையம் அமைந்திருக்கிறது. இதில் கூடுதல் வசதியாக உணவகங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பிடம், வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம் போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளது. உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபார நோக்குடன் வருகிறவர்களுக்கு ஏற்ற வகையில் இரண்டு நுழைவாயில்கள் இதில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில், இந்த வர்த்தக மையம் என்பது வண்ண மீன் உற்பத்தியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

வருகின்ற 11ஆம் தேதி மாலை 6 மணி அளவில், சர்வதேச தரத்தில் அமைத்துள்ள கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் வண்ண மீன் உற்பத்தியாளர்களிடம் மகிழ்ச்சியுடன் ஒப்படைக்க இருக்கிறார்.

Verified @ RealEstate™

இந்த அரும்பணிக்கு ஊக்கமளிக்க, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலோடு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி, இந்த மையம் அமைக்க உதவிய மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அருமை அண்ணன் திரு.அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், மீன்வளத் துறையின் செயலாளர் டாக்டர். சுப்பையன் அவர்களுக்கும், எங்கள் துறையின் செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா அவர்களுக்கும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.பிரகாஷ் அவர்களுக்கும், மீன்வளத் துறையின் ஆணையாளர் முரளிதரன் அவர்களுக்கும், எங்கள் துறையின் தலைமை செயல் அலுவலர் திரு.சிவஞானம் அவர்களுக்கும், மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளுக்கும், குறிப்பாக இந்த நிகழ்வு அமைவதற்கு முழு ஒத்துழைப்பை வழங்கி வந்த வில்லிவாக்கம் சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்கினிய திரு.வெற்றி அழகன் அவர்களுக்கும், மண்டலத் தலைவர் திரு.ஜெயின் அவர்களுக்கும், இந்த கட்டமைப்பை உருவாக்கிய அமைச்சர் என்ற வகையில் என் நெஞ்சார்ந்த மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்**.

இந்த ஆய்வின்போது வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றி அழகன், சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் ந.சுப்பையன், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் திரு.க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.கூ.பீ.ஜெயின், திருமதி.சரிதா மகேஷ்குமார், தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர் திருமதி.சுதா தீனதயாளன் மற்றும் பல்வேறு துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate